## திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழா!

# அன்னைத் தமிழில் வழிபாட்டுடன் பக்தர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் நடைபெற்றது!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!



சென்னை, ஜூலை 9 -

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழா நேற்று முன்தினம் (07.07.2025) காலை அன்னைத் தமிழில் வழிபாட்டுடன் ஒத மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்நீதிமன்ற நீதியரசர்கள், தவத்திரு சிருங்கேரி மட ஆதீனம், தவத்திரு தருமபுர ஆதீனம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், சிறப்பு பணி அலுவலர்கள் சந்தீப் நந்தூரி மதுசூதன் ரெட்டி பிரதீப் குமார் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் திருக்கோயில் தக்கார் ஆர். அருள்முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கும் வகையில் திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.400 கோடி மதிப்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைய தினம் வெகு சிறப்பாக குடமுழுக்கு நடைபெற்றது. இதுவரை முடிவடையாத இதர திருப்பணிகளை வரும் அக்டோபர் மாதத்திற்குள் நிறைவு செய்யும் வகையில் 15 நாட்களுக்கு ஒருமுறை ஆய்வு கூட்டங்களை நடத்தி பணிகள் துரிதப்படுத்தப்படும். இன்றைய தினம் திருச்செந்தூரில் நடைபெற்ற குடமுழுக்கில் 76 குண்டங்களுடன் வேள்விச் சாலை அமைக்கப்பட்டு 12 பெண் ஓதுவார்கள் உட்பட 108 ஓதுவார்களை கொண்டு அன்னைத் தமிழில் பன்னிரு திருமுறைகள், திருப்புகழ் மற்றும் கந்தர் அனுபூதி முற்றோதல் செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. இக்குடமுழுக்கில் சுமார் 5 இலட்சம் பக்தர்கள் கலந்து கொண்டார்கள் என காவல்துறை அறிக்கை தெரிவித்துள்ளது. பக்தர்களுக்கு குடிநீர், கழிப்பிட வசதிகள், மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டதோடு 5 இடங்களில் அன்னதாமும், தன்னார்வலர்களை கொண்டு ஒரு லட்சம் உணவு பொட்டலங்களும் வழங்கப்பட்டன. குடமுழுக்கு நடைபெற்றவுடன் பக்தர்களுக்கு ஸ்பிரிங்கலர் மற்றும் ட்ரோன்களை கொண்டு புனித நீர் தெளிக்கப்பட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை கூடுதல் காவல் துறை இயக்குநர் டேவிட்சன் ஆசீஸ்வாதம் மற்றும் தென்மண்டல காவல் துறை தலைவர் பிரேம் ஆனந்த் சின்கா ஆகியோர் தலைமையில் 6,100 க்கும் மேற்பட்ட காவல்துறையினர் மேற்கொண்டனர். கடந்த 6 நாட்களில் 19 ஆன்மிக கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. பக்தர்கள் அனைவரும் முழு திருப்தியோடு குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று திரும்பினர். தொடர்ந்து 30 நாட்கள் சுழற்சி முறையில் இணை ஆணையர்கள் பணிபுரிய இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

குடமுழுக்கு பெருவிழா முன்னேற்பாடு பணிகளை அவ்வபோது ஆய்வு செய்து பணிகளின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக இருந்திட்ட துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களுக்கும், அனைத்து துறை அலுவலர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து வருகைதந்து குடமுழுக்கில் கலந்து கொண்டு சிறப்பித்த பக்தர்களுக்கும், ஊடகத்துறை நண்பர்களுக்கும் துறையின் அமைச்சர் என்ற முறையில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

#### திருப்பரங்குன்றம் கோயிலுக்கு குடமுழுக்கு!

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அறுபடை வீடுகளுக்கு 2,000 மூத்த குடிமக்களை கட்டண மில்லாமல் அரசு மானியத்தில் அழைத்து சென்றோம். ஆன்மிகப் பயணத்தை நடத்தினோம். இந்தாண்டும் 2,000 மூத்த குடிமக்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர். அறுபடை வீடுகள் மற்றும் அறுபடைவீடு அல்லாத முருகன் திருக்கோயில்களில் ரூ.1,085 கோடி மதிப்பீட்டில் 884 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பழனி தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தியதோடு ரூ.98 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வரைவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. மேலும், இரண்டாம் பெருந்திட்ட வரைவிற்கு ரூ.58 கோடி மதிப்பிலான 50 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றம் திருக்கோயி லுக்கு வருகின்ற 14ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற உள்ளது. திருத்தணி திருக்கோயி லில் பெருந்திட்ட வரைவின்கீழ் புதிய திருமண மண்டபங்களை திறந்து வைக்க இருக்கின்றோம். வடபழனி முருகன் கோயில், மருதமலை முருகன் கோயில், குன்றத்தூர் முருகன் கோயில் ஆகிய திருக்கோயில் களுக்கு குடமுழுக்கு நடத்தியுள்ளோம். சுவாமி மலையிலும், மருதமலையிலும் மின்தூக்கி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படி தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கும் ஆட்சியாக இந்த திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது.

திருச்செந்தூர் திருக்கோயிலின் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டணம், தனியார் விடுதிகளை விட குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறைகளின் பராமரிப்பு கட்டணம் போன்றவற்றை கருத்தில் கொண்டு மேலும் அறை கட்டணத்தை குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும். முக்கிய திருக்கோயில்களில் பிரேக் தரிசனத்தை செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இதுகுறித்து திருக்கோயில் அர்ச்சகர்கள் மற்றும் அந்த பகுதி மக்களின் கருத்துகளை கேட்டறிந்து முடிவு செய்வோம். முதற்கட்டமாக திருச்செந்தூர், திருவண்ணாமலை, பழனி போன்ற திருக்கோயில்களுக்கு ஆன்லைன் புக்கிங் மற்றும் பிரேக் தரிசனம் செயல்படுத்துவது குறித்து சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. இந்தாண்டு இறுதிக்குள் ஆன்லைன் புக்கிங் மற்றும் பிரேக் தரிசனம் செயல்படுத்தப்படும்.

இந்த அரசு ஏற்பட்டவுடன் இது ஆன்மிகத்திற்கு எதிரான அரசு என்ற பிம்பத்தை உருவாக்க நினைத்தவர்களின் பிம்பத்தை முதலமைச்சர் அவர்கள் அடித்து நொறுக்கினார்கள். அதனால்தான் இந்து சமய அறநிலையத்துறையை அரசிடமிருந்து எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். கடந்த 27 ஆம் தேதி சென்னை, கீழ்ப்பாக்கத்தில் நடைபெற்ற ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி புதிய கட்டிட திறப்பு விழாவில் தவத்திரு தர்மபுர ஆதீனம், தவத்திரு குன்றக்குடி ஆதீனம், தவத்திரு மயிலம் ஆதீனம் போன்றோர் பேசும்போது, இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றையும் ஏற்கனவே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற தவறுகளையும் சுட்டிக்காட்டி இதற்கென அமைக்கப்பட்ட கமிட்டி பிரிந்துரையின் அடிப்படையில் துறை உருவாக்கப்பட்டதை எடுத்துக் கூறி னார்கள். பல்வேறு தடைகளை கடந்து 1959 ஆம் ஆண்டு மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபதிகளால் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டத்தின் படியே தற்போது இந்து சமய அறநிலையத்துறை செயல்பட்டு வருகிறது. அவர்களின் விருப்பப்படி இந்து சமய அறநிலையத்துறையை எடுத்துவிட்டால் 44,000 திருக்கோயில்களை யாரிடம் கொடுத்து நிர்வகிப்பது? துறை என்று ஒன்று இருந்தால் தான் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த முடியும். ஆகவே, கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் தெய்வங்கள் உள்ளளவும் தெய்வ நம்பிக்கை உள்ளளவும் நிச்சயமாக இந்த துறை அரசு சார்பில் தான் இருக்கும், இருக்க வேண்டும்.

#### பழனியில் முருகன் மாநாடு

பழனியில் நாங்கள் நடத்திய மாநாடு வேறு, மதுரையில் அவர்கள் நடத்திய மாநாடு வேறு. நாங்கள் அரோகரா என்றுதான் கூறிக் கொண்டிருந்தோம். அமித்ஷா வாழ்க என்று கோஷம் போடவில்லை. நாங்கள் யாரையும் அழிப்போம் ஒழிப்போம் என்று சொன்னோமா? அவர்கள்தான் திராவிட கலாச்சாரத்தை அழிப்போம் ஒழிப்போம் என்ற பேசினார்கள். அண்ணாவையும், பெரியாரையும் திட்டினார்கள். பழனியில் நடைபெற்றது பக்தர்களின் மாநாடு. மதுரையில் நடைபெற்றது பாரதிய ஜனதாவின், சங்கிகளின் மாநாடு.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

## மரக்காணம் ஒன்றியம் கீழ் புத்துப்பட்டு

# இலங்கை வாழ்தமிழர்களுக்கு 23.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 440 தொகுப்பு வீடுகள் திறப்பு விழா!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. - ரவிக்குமார் எம்.பி,மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

மரக்காணம், ஜூலை 9-

மரக்காணம் ஒன்றியம் கீழ் புத்துப்பட்டு இலங்கை வாழ்தமிழர்களுக்கு 23.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 440 தொகுப்பு வீடுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, ரவிக்குமார் எம்.பி, மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் தொடங்கி வைத்தனர். விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் கீழ்புத்துபட்டு ஊராட்சியில் அமைந்துள்ளது இலங்கை வாழ் தமிழர்கள் முகாம்.

இங்கு 2000 ஆயிரத்திற்கு மேற்பட்ட இலங்கை வாழ் தமிழர்கள் மக்கள் வசித்து வருகின்றனர்.

இங்கு பல வருட காலமாக வாழும் மக்களுக்கு சரியான வீடுகள் இல்லாமல் இரும்பு தகரம் மற்றும் கூரை ஓட்டுகளில் வாழ்ந்து வந்தனர் இதனால் மழைகாலங்களில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாயினர்.

இந்நிலையில் தமிழக அரசு சார்பில் சுமார் ரூபாய் 23.4 கோடி செலவில் 440 வீடுகள் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவை கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து மரக்காணம் ஒன்றியம் கீழ் புத்துப்பட்டுஇலங்கைவாழ்தமிழர்கள் முகாமில் தொகுப்பு வீடுகள் கட்டு பணிகள் நடைபெற்று வந்த நிலையில் தற்பொழுது தொகுப்புப்வீடுகள் கட்டும் பணிகள் நிறைவடைந்ததையடுத்து நேற்று தலைமை செயலகத்தில் இருந்து காணொளி காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலங்கை வாழ் தமிழர்கள் வாழ்முகாமில் கட்டப்பட்ட வீடுகளை திறந்து வைத்தார்.

கீழ் புத்துப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கு தொகுப்பு வீடுகளை திறந்து வைத்தனர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் பத்மஜா, மாவட்ட ஊராட்சி துணை சேர்மன் ஷீலா தேவி சேரன், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணைச் சேர்மன் பழனி, வட்டாட்சியர் தமிழரசி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிலம்பு செல்வன் நீலவேணி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவள்ளி குப்புராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் துர்கா தேவி கலைஞர், தேசம் பாலா, சபரி முனுசாமி, நாகஜோதி கணேஷ், விஜயா பெருமாள், ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், பொதுக்குழு பாலகிருஷ்ணன், மீனவர் அணி தங்கராஜ், ஆதிதிராவிடர் நலனி திருமலை, நிர்வாகிகள் தியாகராஜன், கருணாகரன் நடுக்குப்பம் செந்தில்குமார், வெற்றிவேல், சாந்த மூர்த்தி, சுரேஷ் குமார், பாபு, தேவா, எழில் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கினங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றியம், சுப்பம்பேட்டை பூத் எண் 157, முத்தாம்பாளையம் பூத் எண் – 159 ஆகிய பகுதிகளில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமில் கலந்து கொண்டு உறுப்பினர்களை சேர்த்தார். உடன் ஒன்றிய செயலாளர் கே.என். பி.ராஜா, ஒன்றிய குழுதலைவர் இ.சச்சிதானந்தம், ஒன்றிய துணை செயலாளர் ஜெயா பன்னீர்செல்வம், ஒன்றியகுழு துணை தலைவர் உதயகுமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், கிளை செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், தெய்வநாயகம், தமிழரசன், விக்னேஷ், நகர்மன்ற உறுப்பினர்கள் புல்லட் மணி, சாந்தாராஜ், எம்.டி.தங்கம், எம்.சி..ராம், தொகுதி அமைப்பாளர் ஆனந்தராஜ், ராஜேஷ், மூர்த்தி, சங்கர், பாரி பெருமாள், ராமகிருஷ்ணன், சதீஷ், ஆனந்தராஜ், அமரன், வார்டு உறுப்பினர் ஆனந்தி, சுந்தரேசன், பாண்டியன், ராஜீவ்காந்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர்.


